**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**வத்திராயிருப்பு**

**அசல் வழக்கு எண். 50/2025**

வா.சா. 1 கனகராஜ், த–பெ. பால்ராஜ்.

நாள்: 12.06.2026

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

1. வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாதியின் வீடு என்ற அமைப்பானது தளத்தில் கட்டுமானம் கட்டி எத்தனை வருடங்கள் ஆகிறது என்றால் நான் பிறப்பதற்கு முன்பே கட்டுமானம் கட்டப்பட்ட நிலையில் தான் உள்ளது. நான் பிறந்த பின்பு அந்த காலகட்டத்தில் மேற்படி கட்டிடத்தின் அமைப்பானது என்ன வகையைச் சார்ந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் ஓடு பொருத்திய கட்டுமானமாக காணப்பட்டது. பொதுவாக ஓடு பொருத்திய வீடுகளில் மாடித்தளம் இருப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்த வழக்குரையில், வழக்கு சொத்தில் கண்டுள்ள கட்டுமானத்தில் மாடி கட்டுமானம் கட்டி சுமார் 70 வருடங்களுக்கு மேலாக அனுபவம் செய்து வருவதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரி தான்.

2. 2016 வது வருடத்தில் அரசு வழங்கும் திட்டமான அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் நான் வீடு கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்ததற்கான விண்ணப்பம் வா .சா.ஆ.7 என்று சொன்னால் சரிதான். வா .சா.ஆ.7 ஆவணத்தில் எந்த சர்வே எண்ணில் வீடு கட்டப்படுகிறது என்றும் வீட்டுக்கான நீளம் மற்றும் அகலம் குறித்த அளவுகள் எதுவும் குறிப்பிட்ட

சொல்லப்பட்டுள்ளதா என்றால் சரிதான். வா .சா.ஆ.7 ஆவணத்தில் எந்த சர்வே எண்ணில் வீடு கட்டப்படுகிறது என்றும் வீட்டுக்கான நீளம் மற்றும் அகலம் குறித்த அளவுகள் எதுவும் குறிப்பிட்டு சொல்லப்படாத காரணத்தினால் மேற்படி ஆவணமானது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

3. வா.சா .ஆ.7 ஆவணமானது அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் வீடு ஒதுக்கீடு செய்வதற்காக வழங்கப்பட்ட விண்ணப்ப படிவம் என்று சொன்னால் சரிதான். வா.சா .ஆ.7 ஆவணம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வா.சா .ஆ.7 விண்ணப்ப படிவத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட வீடானது விண்ணப்பம் செய்ய எண்ணிய இடத்தில் கட்டப்படாமல் வழக்குச் சொத்தில் கட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். விண்ணப்பம் செய்யப்பட்ட இடத்தில் கட்டுமானம் கட்டாமல் வேறு இடத்தில் கட்டுமானம் கட்டப்பட்டால் கட்டுமானம் கட்டுவதற்காக அரசாங்கத்தில் இருந்து வழங்கப்பட்ட தொகையை திரும்ப செலுத்த வேண்டும் என்ற நிபந்தனை உள்ளது என்று சொன்னால் சரிதான்.

4. முந்தைய குறுக்கு விசாரணையின் பொழுது அரசாங்கத்தால் தயார் செய்யப்பட்ட வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்று கூறியுள்ள நிலையில் மேற்படி வரைபடத்தை விண்ணப்பம் செய்து இன்று பெற்று வந்துள்ளேனா என்றால் இல்லை. 1வது பிரதிவாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்த Caveat மனுவில் சொத்துக்கான விஸ்தீரணம் தவறாக காண்பிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று வழக்குரையில் சொல்லியுள்ளோம் என்று சொன்னால் சரிதான். Caveat மனுவில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கான அளவுகள் என்ன என்றால் தென்வடல்

126 அடி, கிழமேல் 25–½ அடியில் வடபுறம் தென்வடல் சுமார் 58 அடியும் கிழமேல் 25–½ அடி என்ற அளவுகளில் காண்பிக்கப்பட்டுள்ளது.

5. நான் கட்டுமானம் கட்டிய பிறகு 1வது பிரதிவாதி கட்டுமானம் கட்டினாரா அல்லது 1வது பிரதிவாதி கட்டுமானம் கட்டிய பின்பு நான் கட்டுமானம் கட்டினேனா என்றால் ஏற்கனவே இருந்த ஓட்டு வீட்டை இடித்துவிட்டு நான் கட்டுமானம் கட்டிய பின்பு தான் 1வது பிரதிவாதி கட்டுமானம் கட்டினார். ஏற்கனவே இருந்த ஓடு பொருத்திய கட்டுமானத்தின் அளவுகளை அனுசரித்து அதே அளவில் புதிதாக கட்டிய கட்டுமானத்தை கட்டி உள்ளோம் என்று சொன்னால் சரிதான். எங்களுக்கு வழங்கப்பட்ட பட்டா ஆவணத்தின் அடிப்படையில் ஓடு பொறுத்திய வீடு கட்டி உள்ளோம் என்றும் எங்களுக்கு காலி மனை கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல.

6. நீதிமன்றத்தில் இருந்து நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்யும் பொழுது 1வது பிரதிவாதிக்கு தென்வடல் 126 அடி இடம் வருவாய்த்துறை ஆவணங்களின் அடிப்படையில் பூமியில் இருப்பதாக குறிப்பிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை தெரிவித்து என்னுடைய தரப்பில் ஆட்சேபனை மனு எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

7. என்னிடம் காண்பிக்கப்படும் சர்வே எண் 675/40க்கான சர்வே வரைபடம் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று சொன்னால்

சரிதான். **சர்வே வரைபடத்தில் உண்மை நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள புல வரைபடமும், பி.வா.சா.ஆ.1 ஆவணமும் ஒரே ஆவணம் என்று சொன்னால் சரிதான். சர்வே எண் 675/40 மற்றும் 39 அளவுகளை வருவாய்த்துறை புல வரைபட அளவுகளுடன் கணக்கீடு செய்தால் 151.6 அடி வருகிறது என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண் 675/40 க்கு தெற்கு எல்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அமைப்புக்கு கிழக்கு பக்கம் மேற்கிலிருந்து 6.8 அளவுக்கு அடுத்து ஒரு சந்து போன்ற அமைப்பு உள்ளது என்று சொன்னால் சரிதான். வடக்கு பக்கம் 7.6 அளவு வருகிறது என்று சொன்னால் சரிதான்.

8. Caveat மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு 1 வது பிரதிவாதிக்கு கிழமேல் 126 அடி மற்றும் தென்வடல் 15.6 அடி அளவுள்ள நிலம் பாத்தியப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. பத்திரத்தில் கண்டுள்ள அளவுகளுக்கு மாறுபட்டு வருவாய்த்துறை ஆவணங்களில் அளவுகள் காணப்படுவதற்கு ஆட்சேபனை தெரிவித்து வருவாய்த்துறை அலுவலகத்தில் நான் ஆட்சேபனை மனு எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. வழக்குரையில் நாங்கள் வீடு கட்டும் பொழுது பிரதிவாதிகள் ஆட்சேபனை செய்ததாகவும் அது குறித்து ஒரு சமாதானம் பேசப்பட்டதாகவும் சொல்லப்பட்டிருப்பது வழக்குக்காக சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 2 வது பிரதிவாதி நீதிமன்ற ஊழியர் என்று குறிப்பிட்டு வழக்குரையில் சொல்லியிருப்பது அவருடைய வேலைக்கு இடைஞ்சல் ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

9. வழக்குரையில் பல்வேறு பொய்யான சங்கதிகளை பிரதிவாதிகளுக்கு எதிராக அவர்களுடைய நட்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரைக்கு பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் எனக்கு தற்பொழுது ஞாபகம் இல்லை. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைக்கு எங்களுடைய தரப்பில் பதில் வழக்குரையிலோ அல்லது நிரூபண வாக்குமூலத்திலேயோ எதுவும் குறிப்பிட்டு சொல்லியுள்ளோமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வருவாய்த்துறை ஆவணங்களின் அடிப்படையில் வீடு கட்டுவதற்காக பிரதிவாதிகள் முயற்சி செய்த பொழுது நான் தான் பிரச்சனை செய்துவிட்டு முதலில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

10. வழக்குச் சொத்தில் பிரதிவாதிகள் எங்களுடைய அனுபவத்தை இடைஞ்சல் செய்ததாக காவல் நிலையத்தில் எந்த புகார் மனுவும் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் பிரதிவாதிகளுடைய அனுபவத்தை நான் தான் இடைஞ்சல் செய்கிறேன் என்றும் அதனால் தாவா வழக்கில் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு